அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்? – திருவள்ளுவர்

The eleventh Chennai Rainbow Pride / Self Respect March is tentatively scheduled for Sunday June 30, 2019, with associated events throughout the month. Watch this page for details

# CHENNAI RAINBOW PRIDE ENTERS ITS ELEVENTH YEAR IN JUNE 2019

சென்னையின் பதினோராவது வானவில் சுயமரியாதை தொடர் ஜூன் 2019

**PRESS MEET:** Friday, May 31, 2019, 11 a.m. at the Press Club, Chepauk, Chennai

**CONTACT:** Delfina (+91 92451 25290) or Jaya (+91 98418 65423), email tamilnadurainbowcoalition@gmail.com

சென்னையின் பதினோராவது வானவில் சுயமரியாதை தொடர் ஜூன் 1, 2019 அன்று தொடங்குகிறது. இந்த மாதத்தின் நிகழ்வுகள், மாற்றுப் பாலீர்ப்பு, பாலின அடையாளம் மற்றும் பால் தன்மைகளின் வெளிப் பாடுகளைக் கொண்டாடும் விதமாகவும், ஆண் மற்றும் பெண் தன்பால் ஈர்ப்பாளர்கள், இருபால் ஈர்ப்பாள ர்கள், திருநர், இடையிலங்க பாலினம், பாலுணர்வு அற்றோர் மற்றும் ஏனையோர்களின் (LGBTIQA+) இய க்கங்களின் முக்கியக் குறிக்கோளாக சுயமரியாதையை உறுதிப்படுத்தும் விதமாகவும் அமைகின்றன.

பத்தாண்டுகளாக சென்னையில் நடைபெறும் நிகழ்ச்சிகளின் நிறைவுகளின் நினைவாக பல்வேறு நிகழ்வுக ள் ஜூன் 1, 2019 அன்று துவங்குகின்றன. கலைநிகழ்ச்சிகள், பாலின அடையாளம் மற்றும் பாலீர்ப்பு குறி த்த விளக்க உரையாடல் நிகழ்வுகள், மனநலன் குறித்த ஓர் நிகழ்வு, படங்கள் நாடகங்கள் மற்றும் பல பண் பாட்டு நிகழ்வுகளும் இதில் அடக்கம். சென்னை சுயமரியாதை நடை ஜூன் 30, 2019 ஞாயிறு அன்று ந டைபெற உள்ளது. வானவில் சுயமரியாதை நிகழ்வுகள் தமிழ்நாடு வானவில் கூட்டமைப்பால் ஒருங்கிணை க்கப்படுகின்றன. இக்கூட்டமைவில் மாநிலம் தழுவிய பல்வேறு தனிநபர்கள், பாலினம் பாலீர்ப்பு சார்ந்து இயங்கும் தொண்டு நிறுவனங்கள் இடம் பெற்றுள்ளன.

தமிழ்நாடு வானவில் கூட்டமைப்பிற் உறுப்பினர்கள் கீழ்க்காணும் கவன ஈர்ப்புகளையும், தேவைகளையு ம் சுயமரியாதை மாதம் தொடர்பானதாக முன்வைக்கின்றனர்.

1. உச்சநீதிமன்றத்தின் சிறப்பு வாய்ந்த செப்டம்பர் 6, 2018 ன் தீர்ப்பை நாங்கள் கொண்டாடுகிறோம். அ து வயதுவந்தோருக்கிடையேயான உறவுகளை குற்றமற்றதாக்கியது. நீதிமன்றம் இந்திய தண்டனைச் சட் டம் 377 ஐ நீக்கி LGBTI மக்களின் அடிப்படை உரிமைகளை இந்திய அரசமைப்புச் சட்டப்படி உறுதி செய் தது. அரசாங்கம் உடனடியாக உச்சநீதிமன்றத் தீர்ப்பின் முக்கிய குறிப்புகளை நாட்டிலுள்ள அனைவரும் குறிப்பாக அரசுத்துறைகள், காவல்துறை, மருத்துவர்கள் மற்றும் கல்வியாளர்களை நடைமுறைப்படுத்தும்

படி அறிவுறுத்த வேண்டும். மேலும் அந்தத் தீர்ப்பின் வரிகளை உயிர்ப்புடன் பின்பற்ற வேகப்படுத்தப்பட வேண்டும்.

2. தமிழ்நாடு அரசு மற்றும் தேசிய சுகாதார பணிகள் கழகம்(தமிழ்நாடு) ஆகியவை இணைந்து திருநர்களுக்கான மருத்துவ மையங்களை மதுரை மற்றும் சென்னையில் உருவாக்கியுள்ளன. அதன்பொருட்டு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் இம்மருத்துவ மையங்கள் திருநர்களின் அத்தனை தரப்பினரையும் உள்ளடக்கியவாறு இயங்கும் என நம்பிக்கை கொள்கிறோம். தமிழ்நாட்டிலுள்ள LGBTIQA+ சமூக மக்கள், மனநல சுகாதார சேவைகள், தற்கொலைத் தடுப்பு உதவியமைப்பு, மற்றும் திருநர்களுக்கான பாலின உறுதியளிக்கும் நடைமுறைகள் உள்ளிட்டவற்றில் களங்கமற்ற தரமான மருத்துவ சேவைகளைப் பெற அவண செய்யும்படி கேட்டுக் கொள்கிறோம்.

3. காவல்துறையினர் பல்வேறு தருணங்களில் வயதுவந்த தற்பாலீர்ப்பு கொண்ட பெண்களை வற்புறுத்தி அவர்களுடைய பெற்றோர்களிடம் திரும்பிச் செல்லும்படி செய்கின்றனர். அங்கு செல்லும் பெண்கள் குடும்பத்தாரால் பல்வேறு வகையான வன்முறைகளுக்கும் உட்படுத்தப்படுகின்றனர். வீட்டுச் சிறை வைத்தலில் தொடங்கி கட்டாயத் திருமணம் வரை இவ்வன்முறைகள் நீள்கின்றன. வயதுவந்தோர் இருவர் சேர்ந்து வாழும் உரிமையை காவல்துறையினர் மதிக்க வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்துகிறோம். இவ்வுரிமை உச்சநீதிமன்றத்தால் ஷாவின் ஜாஹன் V அசோகன் KM. மற்றும் நவ்தேஜ் ஜோகர் V இந்திய அரசாங்கம் ஆகிய வழக்குகளில் வழங்கிய தீர்ப்புகளாலும், கேரளா, கல்கத்தா, டெல்லி உயர்நீதிமன்றங்களால் சமீபகாலங்களில் வழங்கப்பட்டுள்ள தீர்ப்புகளாலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் IPC 377 இன் நீக்கத்திற்குப் பிறகும் தொடரும் தற்பாலீர்ப்பு மற்றும் ஈர்பாலீர்ப்பு ஆண்களிடம் நடத்தப்படும் மிரட்டல் மற்றும் பணம் பறிக்கும் சம்பவங்கள் போன்றவற்றிலும் காவல்துறையினர் உதவிகரமாயிருக்கும்படிக் கேட்டுக் கொள்கிறோம்.

4. தனிமனிதர்கள் அனைவருடனும்ரு ஒங்கிணைந்து வாழ வழிவகை செய்யும் பாகுபாடுகளுக்கு எதிரான ஓர் சட்டத்தை தேசிய அளவில் கொண்டுவர வேண்டும். இச்சட்டம் பரந்த அளவில் பாலீர்ப்பு, பாலின அடையாளம், பால்பண்புகள் அவற்றுடன் கூட சாதி, மத, இயலாமைகளுக்கு எதிரான பாகுபாடுகளுக்கு எதிரானதாகவும் அமைய வேண்டும். பாகுபாடு மற்றும் துன்புறுத்தலுக்கு எதிரான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அவை கண்டிப்பான முறையில் தனியார் மற்றும் அரசு கல்வி நிலையங்கள், பணியிடங்கள் மற்றும் மருத்துவ மையங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

5. தேசிய சட்டப் பணிகள் கழகம் V இந்திய அரசு வழக்கின் உச்ச நீதிமன்ற வழிகாட்டுதல்களை மத்திய மாநில அரசுகள் நடைமுறைப்படுத்த வேண்டும் என கேட்டுக் கொளெளகிறோம். மேலும் மாநிலங்களின் திட்டங்களில் திருநங்கைகளுடன் திருநம்பிகளும் உள்ளடங்கியிருக்க வேண்டும். NALSA V இந்திய அரசு வழக்கின் உச்ச நீதிமன்றத்தின் முடிவுகளுக்கு எதிராக இருப்பதால் திருநர் மசோதாவை எதிர்க்கிறோம். NALSA தீர்ப்பிற்கிணங்கவும், சுய கண்டடைவுக்கான உரிமைகளை மதிப்பதாகவும், பிச்சையெடுத்தலைக் குற்றமாக ஆக்காமலும், மேவும் தனியார் மற்றும் அரசு சார்ந்த கல்வி நிலையங்கள், பணியிடங்கள் போன்றவற்றில் இடஒதுக்கீடு அளிப்பதாகவும் இருக்க வேண்டும். இதுவரையிலும் ஒருங்கிணைக்கப்படாத பகுதியாக இருக்கும் LGBTI மக்களை உள்ளடக்கிய மறுசீரமைவை வேகப்படுத்தும்படிக் கேட்டுக் கொள்கிறோம்.

6. உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் நடைபெற்ற அருண்குமார் V தலைமை ஆய்வாளர் (பதிவுத்துறை) வழக்கில் ஏப்ரல் 22, 2019 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பை வரவேற்கிறோம். அத்தீர்ப்பானது ஒரு திருநங்கைக்

கும் ஆணுக்கும் இடையேயான திருமணத்தை  அங்கீகரித்தது. மேலும் கட்டாய மருத்துவ செயல்பாடுகளுக்கு இடையிலங்க குழந்தைகள் உட்படுத்தப்படுவதையும் எதிர்த்து தீர்ப்பு வழங்கிய நீதிமன்றத்தின் செயல்பாட்டினை வரவேற்கிறோம்.

7. தமிழ்நாடு மூன்றாம் பாலின நலவாரியம் NALSA தீர்ப்பின் அனைத்து பகுதிகளுக்கும் ஏற்ப செயல்பட்டு உடனடியாக திருநம்பிகளையும் அதில் இணைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம். தமிழ்நாடு Gazette Notification மூலமாக பெயர்மாற்றம் செய்வதில் திருநர் மக்கள் குறிப்பாக திருநம்பிகள் சந்திக்கும் சிரமங்களை அரசாங்கத்தின் பார்வைக்குக் கொண்டுவர விழைகிறோம். அவர்கள் அறுவை சிகிச்சை செய்த அடையாளமோ அல்லது தமிழ்நாடு மூன்றாம் பாலின நலச்சங்கத்திலிருந்து அடையாளச் சான்றோ இருந்தால் மட்டுமே பெயர் மாற்றத்துக்கு விண்ணப்பிக்க இயலும். இது NALSA தீர்ப்புக்கு முற்றிலும் எதிரானது. மேலும் திருநம்பிகள் தமிழ்நாடு மூன்றாம் பாலின நலச்சங்கத்தில் இணைக்கப்படாமல் இருப்பதால் அங்கிருந்தும் அடையாளச் சான்று வாங்க இயலாது. தனிமனிதர்கள் தங்களின் பெயர் மற்றும் பாலினத்தை மாற்ற வேண்டி விண்ணப்பிக்கும் போதும் மருத்துவச் சான்றுகள் கேட்கப் படுகின்றன. இதுபோன்ற செயல்பாடுகள் சுய தீர்மான உரிமைகளுக்கு முற்றிலும் எதிரானவை.

8. கடந்த ஆண்டில் தமிழ்நாட்டில் கொலையாலும் தற்கொலையாலும் எங்களை விட்டுப் பிரிந்த எங்கள் மக்களுக்காக நாங்கள் வருந்துகிறோம். ‘மாற்று சிகிச்சை’ என்ற பெயரில் பாலின அல்லது பாலீர்ப்பு அடையாளங்களை மாற்றும் அறிவியல் மற்றும் அறவியலுக்கு எதிரான செயல்பாடுகளுக்கு உட்பட வேண்டாம் என்று LGBTIQA+ மக்களின் குடும்பத்தினரைக் கேட்டுக் கொள்கிறோம். அவர்களை கட்டாயத் திருமணம், காதலர் மற்றும் துணைவர்களிடமிருந்து பிரித்தல் போன்ற செயல்களைச் செய்யாது எவ்விதத் தயக்கங்களும் இன்றி தம் குழந்தைகளை ஏற்றுக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கிறோம்.

9. தேசிய வாடகைத்தாய் சட்டமானது LGBTIQA+ மக்களை உள்ளடக்கியிருக்க வேண்டும் எனவும், திருமணத்தின் பெயரால் நடத்தப்படும் பாலியல் வன்முறைகள் குற்றச் செயல்களாகக் கருதப்படவேண்டும் என்றும் வலியுறுத்துகிறோம். தமிழ்நாட்டில் அதிகாரப்பூர்வமில்லாமல் நடைமுறையிலிருக்கும் வாய்வழி கருத்தடை மருந்துகள் தடையை நீக்க வேண்டும் எனவும், அம்மருந்துகள் பாலின பாலீர்ப்பு வேறுபாடின்றி அனைவர்க்கும் கிடைக்கப்பெற வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறோம்.

10. பெரும்பான்மை சக்திகளின் ஒடுக்குமுறைக்கு எதிராகவும், சாதி, வர்க்கம், உணவு, இயலாமை, மதம் போன்றவற்றை முன்னிறுத்தி நிகழ்த்தப்படும் மனித உரிமை மீறல்களுக்கு எதிலாக இயங்குபவர்களுடன் எப்போதும் ஒன்றுபட்டே இருக்கிறோம்.

**USEFUL LINKS**

- On Facebook, check out https://www.facebook.com/chennaipride/
- Frequently Asked Questions about Chennai Pride March http://chennaipride.net/faq